# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.506/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 01 ( PW- 01 ) |
| பெயர் | :- | ஈஸ்வரன் த/பெ. ஆறுமுகம் |
| தேதி | :- | 21-04-2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

எனக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் இடம் வாங்கி விற்கும் தொழில்செய்தேனா என்றால் இல்லை. நான் உள்ளாடை உற்பத்தி தொழில்செய்தேன். அதுச் சம்மந்தமாக உரிமம் வைத்துள்ளேனா என்றால் என் தகப்பனார் பெயரில் உள்ளது. அவருக்கு பிறகு நான் அந்த தொழிலைசெய்கிறேன். அந்த தொழில் சம்மந்தமாக கணக்கு வழக்குகள் வைத்துள்ளேன் என்றால் சரிதான். தொழில் சம்மந்தமாக வருமான வரி கணக்கு தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தனிப்பட்ட வருமானத்திற்கு வருமான வரி கணக்கு தாக்கல்செய்தேனா என்றால் இல்லை. வரவு செலவு கணக்குகளை வங்கி கணக்கு மூலம் செய்கிறேன் என்றால் ஆமாம்.

28.05.2019-ஆம் தேதியன்று 12,00,000/- உரூபாய் முன்பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த நாளில் என்னிடம் மேற்சொன்ன பணம் இருந்தது என்று காட்ட என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. அதை இந்த வழக்கில் நான் இதுவரை தாக்கல்செய்ய-

வில்லை என்றால் சரிதான். என்னிடம் ஆதராம் எதுவும் இல்லாததால்தான் அதை இதுவரை தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மேற்சொன்ன தொகையை கொடுக்க வருவாய் வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

விற்பனைக்கான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான காலக்கெடு எவ்வளவு என்றால் 06 மாதங்கள். மீதி விலை பணம் எவ்வளவு என்றால் 1,10,000/- உரூபாய் ஆகும். அந்த காலகட்டத்தில் ஒரு மாதத்திற்கு எனக்கு எவ்வளவு வருவாய் கிடைத்திருக்கும் என்றால் சுமார் 50 ஆயிரம் இருக்கும். ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஏன் 06 மாதம் கெடு விதிக்கப்பட்டது என்பதற்கு ஒப்பந்தத்தில் காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

01-ஆம் பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் இடைத் தரகர் மூலம் தெரியும். விற்பனைக்கான ஒப்பந்தம் ஏற்பட்ட நாளில் நான் விற்பனை பத்திரம் எழுதிக்கொள்ள தயாராக இல்லை என்றால் சரியல்ல. தயாராக இருந்தேன். ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் வழக்குச் சொத்தில் வில்லங்கம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலே நான் கிரயம் வாங்க தயாராக இருந்தேன் என்று ஒப்பந்தத்தில் வாசகம் இல்லை என்றால் சரிதான். நான் கிரயம் வாங்க தயாராக இருந்திருந்தால் அன்றே கிரயம் வாங்கியிருப்பேன் என்றும் இந்த வழக்கிலுள்ள ஒப்பந்தம் பொய்யாக புனையப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. சொத்தில் வாடகைக்கு இருந்தவர்களை வெளியேற்ற கால அவகாசம் கேட்டதால் ஒப்பந்தம் செய்துகொண்டேன். மேற்சொன்ன சங்கதியை ஒப்பந்தத்திலோ வழக்குரையிலோ முதல்விசாரணையிலோ சொல்லாமல் தற்போதுதான் கூறுகிறேன் என்றும் அது ஏற்புடையதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

விற்பனைக்கான ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலேயே நான் கிரயம் வாங்க தயாராக இருந்தேன் என்று காட்ட நான் எந்த ஆதாரத்தையும் தாக்கல் செய்ய -வில்லை என்றால் சரிதான். 18.10.2019-ஆம் தேதியன்று தாதகாப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தேன் என்று காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த தடங்கள் மனுவை தாக்கல்செய்துள்ளேன். நான் அன்று செல்லவில்லை என்றும் சென்றாதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அன்று நான் எஞ்சிய விலை பணத்தை வைத்திருந்தேன் என்று காட்டவும் செலவிற்கான பணத்தையும் வைத்திருந்தேன் என்று காட்டவும் தனியாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வழக்குரைஞர் அறிவிப்பு யார் யாருக்கு அனுப்பினேன் என்றால் மூர்த்தி என்பவருக்கும் அவர் அழைத்து வந்த சான்றாளர் துரைசாமி என்பவருக்கும் அனுப்பினேன். விற்பனைக்கான ஒப்பந்தத்தில் மூர்த்தியின் சார்பாக துரைசாமி என்பவரும் என் சார்பாக பழனியப்பன் என்பவரும் சான்றொப்பம் இட்டனர். பழனியப்பனுக்கு நான் அறிவிப்பு அனுப்ப -வில்லை.

பத்திரம் எழுதுவதற்கான முத்திரை தாளை சொத்தை வாங்குபவர்கள் பெயரில் வாங்குவார்கள் என்றால் சரிதான். ஒப்பந்தத்திற்கான முத்திரை தாள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் என் பெயரில்தான். முத்திரை தாள் என் பெயரில் வாங்கப்படவில்லை என்றும் J.மூர்த்தி பெயரில் உள்ளது என்றும் சொன்னால் பத்திரத்தை பார்த்துவிட்டு ஆமாம் என்று சாட்சி சொல்கிறார். வழக்குச் சொத்தை பொறுத்து எனக்கும் மூர்த்திக்கும் இடையே விற்பனைக்கான ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றும் அதனால்தான் அவர்

பெயரில் முத்திரைத்தாள் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான், 01-ஆம் பிரதிவாதி மூர்த்தி, துரைசாமி ஆகியோர் இடம் வாங்கி விற்கும் தொழிலை கூட்டாக செய்தோம் என்றால் சரியல்ல. அந்த நடவடிக்கையில் மூர்த்தியிடமிருந்து பிணையத்திற்காகதான் ஒப்பந்தம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் 01-ஆம் பிரதிவாதி மூர்த்திக்கும் இடையே வழக்குச் சொத்தை பொறுத்து விற்பனைக்கான ஒப்பந்தம் எதுவும் ஏற்பட -வில்லை என்றால் சரியல்ல.

01-ஆம் பிரதிவாதி மூர்த்தி இறந்துவிட்டார் என்றால் சரிதான். மஞ்சள் காமாலை நோயால் இறந்துவிட்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. 01-ஆம் பிரதிவாதி மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு மைசூரில் சிகிச்சை பெற்றார் என்றும் அங்குதான் இறந்தார் என்றும் அது எனக்குத் தெரியும் என்றும் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு 01-ஆம் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டதா என்றால் இல்லை. அவர் வாங்காததால் திருப்பி வந்துவிட்டது. அஞ்சலுரையில் Left Not Known என்ற காரணத்தினால் திருப்பப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நான் சொல்வது போன்று அவர் வாங்க மறுத்ததால் திருப்பப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 01-ஆம் பிரதிவாதி மைசூரில் இருப்பது எனக்கு தெரிந்திருந்தும் அந்த சமயத்தில் அறிவிப்பு அனுப்பினால் அவருக்கு சார்வாகாது என்று தெரிந்தே வேண்டுமென்றே நான் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல.

தடங்கல் மனுவின் நகல் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. வாதி தரப்பு 05-ஆம் சான்றாவணம் தடங்கல் மனு கொடுக்கப்பட்டது என்று காட்டும் இரசீதுதான் என்றால் சரிதான். அன்று நான் பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றும் என் பெயரில் வேறு யாரையோ வைத்து மனு கொடுத்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் அழைப்பாணையை 01-ஆம் பிரதிவாதிக்கு சார்வு செய்ய நடவடிக்கை எடுக்காததால் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப் -பட்டது என்றால் சரிதான். 01-ஆம் பிரதிவாதி இறந்தபிறகுதான் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல்செய்தேன் என்றால் சரியல்ல. 01-ஆம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்திருந்தால் அவர் வழக்கில் தோன்றி உண்மை நிலையை விளக்கியிருப்பார் என்றும் அதை தவிர்க்கவே வழக்கை தள்ளுபடி செய்யப்படுவதற்கு விட்டுவிட்டு அவர் இறந்தபிறகு மீண்டும் கோப்பிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தை விற்கும் நோக்கதோடு எனக்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் இடையே வழக்கில் உள்ள விற்பனைக்கான ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றும் அவர் ஒருபோதும் சொத்தை விற்க விருப்பப் -படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரையில் கோரியுள்ள நிவாரணம் எதையும் பெறுவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.